-031

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING**

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## BCOM – 28 (II) Cost and Management Accounting – II
## BCOM – 28 (II) கிரய, முகாமைத்துவக் கணக்கியல்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்
கணிப்பான் உபயோகிக்கமுடியும்.

---

**01.** நீங்கள் வரையறுத்த சுப்ரி கேஸ் கம்பனியின் கிரய கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளீர். நிதி முகாமையாளர் பின்வரும் விடயங்கள் குறித்து உடனடியாக உங்களை பதிலளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். உங்களின் பதில் எதிர்வரும் வாராந்த முகாமையாளர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- ஒரு பொறியின் நியமக் கிரயம் 20 லீற்றராகவும் நியம விலை 1 லீற்றருக்கு ரூபா 15/- ஆகவும் காணப்படும்போது, உண்மையாக 24 லீற்றர்கள் 1 லீற்றருக்கு ரூபா 21/- படியும் அமையும் போது அதன் முரணைக்கணிக்க?

(6 புள்ளிகள்)

- நியமக் கிரயம் 100 நேர் ஊழிய மணித்தியாலங்கள் மணிக்கு ரூபா 24/- படியும் இருக்கும் நிலையில் உண்மையாக 110 மணித்தியாலயங்கள் ரூபா 2310 கிரயப்படி எழுந்துள்ள நிலையில் அதன் முரணை மதிப்பிடுக?

(6 புள்ளிகள்)

- ஹையிட்ரெஜன் பென்ஒக்சைட் என்ற பொருளானது முறையே 1:5 எனும் விகிதாசாரத்தில் ஹைட்ரெஜன், ஒக்சிஜன் ஆகிய கலவைகளைக்கொண்டு உற்பத்தி செய்யப்புடகின்யது. இவைகளின் ஒரு கன அடிக்கான நியம விலைகள் முறையே ரூபா 30/- யும் ரூபா 3/- ஏற்படுகின்றது. குறிப்பிட்ட காலத்தில் 57,600 ஒக்கிஜன் பயன்படுத்தப்படுகின்றது. மூலப்பொருள் கலவை முரணைக் காண்க?

(6 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**02.** வரையறுத்த லம்பாடா நிறுவனம் புதிய பொருள் ஒன்றை உற்பத்தி செய்வதற்கு ரூபா 150,000/- பெறுமதியான புதிய இயந்திரம் ஒன்றையும், தற்போது ரூபா 60000/- புத்தக பெறுமதி யையும் (கிரயம் ரூபா 80000/- ) உடைய பழைய இயந்திரத்தையும் பயன்படுத்த உள்ளது. இந்த இயந்திரம் போதுமான அளவு கொள்ளவை கொண்டு இருப்பதுடன் இதுவரை குறைவான பாவனையில் இயங்கிக் கொண்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வருடாந்த விற்பனை அலகு ஒன்றிற்க்கு ரூபா 32/- படி 5000 அலகுகளாக இருக்கும். ஒரு அலகுக்கான கிரயம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| நேர் கூலி 4 மணித்தியாலயம் ரூபா 2/- படி | 8 |
| நேர் மூலப்பொருள் | 7 |
| நிலையான கிரயம் | 9 |
| | 24 |

இத்திட்டம் 5 வருடங்கள் கொண்டதாகவும். இயந்திரத்தின் இறுதிப் பெறுமதி ரூபா 10000/- வாக அமையும்.

நேர்கூலி நிரமப்பல் தட்டுப்பாடாக காணப்படுவதால் இத்திட்டத்திற்கு தேவையான ஊழியர்களுக்காக வேறு ஒரு திட்டத்தில் தற்போது வேலை செய்துகொண்டு இருக்கும் ஊழியர்களை பயன்படுத்த வேண்டும். அந்த ஊழியர்கள் தற்போது மணிக்கு ரூபா 1/50 பங்களிப்புச் செய்யும் திட்டமொன்றில் வேலை செய்கின்றார்கள். நிலையான மேந்தலை உறுஞ்சல் விகிதமானது மணிக்கு ரூபா 2.25 ஆக (அதாவது அலகுக்கு ரூபா 9/-) அமைகின்றது. ஆனாலும், உண்மையான நிலையான மேந்தலை மாற்றம் அடையாது. திட்டத்திற்குத் தேவையான நடைமுறை மூலதனம் திட்டம் ஆரம்பிக்கும் போது ரூபா 10,000/- ஆகவும் இரண்டாம் வருடத்தின் ஆரம்பத்தில் அத்தொகை ரூபா 15,000/- வும் அதிகரிக்கப்படும். இவை திட்டத்தின் இறுதியில் மீளப் பெறப்படும்வரை அவ்விலையிலேயே காணப்படும்.

கம்பனியின் மூலதனக் கிரயம் 20% ஆகும். வரி, பணவீக்கம் என்பன தவிர்க்கப்படும். இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாமா? உமது ஆலோசனையை உரிய செய்முறையுடன் வழங்குக.

| வருடம் | DFC 20% |
|---|---|
| 1 | 0.833 |
| 2 | 0.694 |
| 3 | 0.579 |
| 4 | 0.482 |
| 5 | 0.402 |
| 6 | 0.335 |

(20 புள்ளிகள்)

**03.** வரையறுத்த XYZ நிறுவனம் PQR என்ற மூன்று பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றன. விற்கப்படும் அலகுகள் 2:1:3 என்ற விகிதாசாரத்தில் அமைகிறது. கம்பனிக்கு 150000 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் கொள்ளவை கொண்டுள்ள போதிலும் எதிர்வரும் வருடத்தில் 84000 அலகுகளையே உற்பத்தி செய்து விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றது. பாதீடு செய்யப்பட்ட உற்பத்தித் தகவல்கள் வருமாறு.

| | P (ரூபா.) | Q ((ரூபா.) | R((ரூபா.) |
|---|---|---|---|
| விற்பனை விலை | 75 | 90 | 150 |
| <u>மாறும் கிரயங்கள்</u> | | | |
| நேர்மூலப்பொருள் | 15 | 20 | 50 |
| நேர்கூலி | 15 | 25 | 20 |
| மேந்தலை | 15 | 15 | 25 |
| விற்பனை தரகு | 10 | 15 | 25 |

பாதீடு செய்யப்பட்ட வருடாந்த நிலையான மேந்தலை

| | ரூபா. |
|---|---|
| உற்பத்தி | 700,000 |
| நிறுவாகம் | 600,000 |
| விளம்பரம் | 300,000 |
| | 1600,000 |

(a) பங்களிப்பு விற்பனை வீதத்தை கணிப்பீடு செய்து பல்பொருள் இலாப வரைபடத்தை ஒரு வரைபுத்தாளில் பதிந்து இலாப நட்டம் அற்ற புள்ளி, பாதுகாப்பு எல்லை, இலாபம் என்பவற்றை தெளிவாக காட்டுக?

(8 புள்ளிகள்)

(b) நிறுவனத்தின் விளம்பரச்செலவு அதிகரிக்கும் என விற்பனை முகாமையாளர் எதிர்வு கூறுகின்றார். எவ்வாறாயினும் விளம்பர முன் எடுப்பினால் மொத்த விற்பனையானது 20% அதிகரிக்குமென அவர் உறுதியாகக் கூறுகின்றார். நிறுவனம் ஆகக்கூடியது எவ்வளவு

விளம்பரச் செலவினை மேற்கொள்ள முடியும் என்பதை விற்பனை விலை, மற்றும் ஏனைய நிலையான செலவுகள், மாறா இருக்குமென கருத்திற்கொண்டு மதிப்பிடுக?

(6 புள்ளிகள்)

(c) பின்வரும் ஒவ்வொரு கட்டுப்படுத்தும் காரணிகளின் போதும் குறித்த நிறுவனம் உற்பத்தி செய்யக்கூடிய P,Q,R பொருளின் முன்னுரிமையை ஆரம்ப விலைக் கட்டமைப்பை அடியொட்டிக் காண்க.

(i) மொத்த விற்பனை பெறுமதி கட்டுப்படுத்தும் காரணி?
(ii) மூலப்பொருள் கிடைப்பனவு கட்டுப்படுத்தும் காரணி?
(iii) ஊழியர் கிடைப்பனவு கட்டுப்படுத்தும் காரணி?

(6 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**04.** வரையறுத்த World Cup நிறுவனம் விளையாட்டுப் போட்டிகளுக்கான டெனிஸ், தோல் பந்துகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கம்பனியின் விற்பனை திணைக்களம் ஏப்ரல், மே மாதங்களுக்கு பின்வரும் தகவல்களை வழங்குகின்றது.

| | டென்னிஸ்பந்து | | தோல்பந்து | |
|---|---|---|---|---|
| | ஏப்ரல் | மே | ஏப்ரல் | மே |
| விற்பனை அளவு | 12200 | 11000 | 10200 | 9000 |
| அலகு உற்பத்தி விலை (ரூபா) | 200 | 200 | 400 | 400 |

**பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்படுகின்றன.**

| | மூலப்பொருள் | | |
|---|---|---|---|
| | இறப்பர் | தோல் | நூல் |
| அலகுவிலை (ரூபா.) | 40 | 30 | 20 |
| உற்பத்திக்குப் பயன்படுத்தும் மூலப்பொருள் | | | |
| தோல்பந்து | 2 அலகு | 3 அலகு | 1 அலகு |
| டென்னிஸ் | 1 அலகு | 2 அலகு | --- |
| ஏப்ரல் 30 இல் காணப்படவேண்டிய மூலப்பொருள் அளவு | 550 அலகு | 600 அலகு | 400 அலகு |
| ஏப்ரல் 1 இல் பாதீடு செய்யப்பட்ட ஆரம்ப மூலப்பொருள் | 300 அலகு | 444 அலகு | 100 அலகு |

10% தோல் செயல்முறையின் போது இழப்பாகும்.

- நேர்கூலி தேவைப்பாடானது டெனிஸ் பந்திற்கு 15 நிமிடங்களும் தோல் பொருட்களுக்கு 30 நிமிடங்களும் ஆகும்.
- ஒரு அலகுக்கான நேர்கூலி மணிக்கு ரூபா 120/-
- இறுதி மூலப்பொருளானது அடுத்த மாதத்தின் விற்பனையில் 25% மாக பராமரிக்கப்படும்.

***வேண்டப்படுவது***

ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் பாதீடுகளை தயாரிக்குக.

1. உற்பத்தி பாதீடு (7 புள்ளி)
2. மூலப்பொருள் கொள்வனவு பாதீடு (7 புள்ளி)
3. நேர்கூலிப்பாதீடு (6 புள்ளி)

(மொத்தம் (20 புள்ளிகள்)

**05.** மாதாந்தம் 8000 அலகுகள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கம்பனி ஒன்று அதன் உற்பத்தி மேந்தலை பாதீட்டினைத் தயாரித்துள்ளது. உண்மையான உற்பத்தியின் ஏற்றத்தாழ்வு காரணமாக, உண்மையான மேந்தலையையும் பாதீடு செய்யப்பட்ட மேந்தலையையும் ஒப்பீட்டு செய்வதில் கம்பனி பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றது.

இதனால், கம்பனியானது நெகிழ்வுப் பாதீடு ஒன்றை தயாரிக்க தீர்மானித்துள்ளது.

8000 அலகுகளை உற்பத்தி செய்வதற்கான மாதாந்த மேந்தலைப் பாதீடு பின்வருமாறு.

| | |
|---|---|
| ***நிலையானது*** | **ரூபா.** |
| வாடகை | 20,000 |
| சம்பளம் | 27,000 |
| இயந்திரம் பெறுமானத் தேய்வு | 6,000 |
| ***மாறும்*** | |
| மேலதிக நேரக்கொடுப்பனவு | 2,000 |
| சக்தி, நீர் | 14,200 |
| உற்பத்தி நுகர்வுகள் | 5,200 |
| ***பகுதிமாறும் (Semi Variable)*** | |
| காப்புறுதி (நிலையான கட்டணம் ரூபா 2000) | 3,200 |
| இறை (40% மாறும் ) | 7,000 |

இயந்திர பராமரிப்பு கடந்த காலத்தில் உண்மையாக எழுந்த செலவுகள் அடிப்படையில் பாதீடு செய்யப்பட்டவை வருமாறு.

| மாதம் | உற்பத்தி (அலகுகள்) | புராமரிப்பு கிரயம் ரூபா |
|---|---|---|
| ஜனவரி | 8200 | 4140 |
| பெப்ரவரி | 7500 | 4000 |
| மார்ச் | 9300 | 4360 |
| ஏப்ரல் | 5200 | 3540 |

உற்பத்தி மட்டம், 10000, 12000, 15000 அலகுகளாக காணப்படும்போது நெகிழ்ச்சி பாதீட்டினைத் தயாரிக்குக.

(20 புள்ளிகள்)